Private Circulation Only
Mission India Movement
July 2026
Tree 09 | Fruit 07

# சீஷன்

Be a disciple & Make a disciple




# தரிசனம்

www misionindiamovement.org jesuvadian Mission India Movement

**பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்போடுகூட உங்களை வாழ்த்துகிறேன். இக்கடிதத்தின் வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**



**"குறித்த காலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய்வரும், அது தாமதிப்பதில்லை"** ஆபகூக் 2:3. தரிசனம் ஒருபோதும் தோற்றுப்போவதில்லை. பிதாவினிடத்திலிருந்து தோன்றிய தரிசனம் குமாரனாகிய கிறிஸ்து அதை நிறைவேற்றினார். குமாரனாகிய கிறிஸ்து சீஷர்களிடம் சொன்ன தரிசனம், சீஷர்கள் உலகமெங்கும் சென்று இந்த சுவிசேஷ தரிசனத்தை இன்றைக்கு நம்மிடையே விதைத்து நாம் இன்று தேசத்திற்குள்ளாக இந்த பணியை செய்து வருகிறோம். இது திசை மாறாத, தடுமாறாத தொடர்ச்சியான தரிசன பயணம். இது பரலோகத்தின் நிச்சய பயணம். ஆண்டவர் உங்களையும் அப்படி அழைக்கிறார். உங்களுடைய பிள்ளைகளையும் இதிலே பங்காளர்களாக இணைத்துக் கொள்ள உங்களை அன்போடுகூட அழைக்கிறேன்.

## கடந்த மாத ஊழியங்கள்

### MIM PILLARS MEETING

மே மாதம் 28, 29, 30 ஆகிய தேதிகளில் தாளவாடியில் நடைபெற்ற கூடுகையை ஆசீர்வதித்த தேவனை துதிப்போம். இக்கூடுகையில் அடுத்த 10 ஆண்டுகளுக்கான திட்டங்கள் கலந்தாலோசித்து செயல்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. சென்னை, விருதுநகர், திருச்சி, கோயம்புத்தூர், ஊட்டி, கோவில்பட்டி, ஆந்திரா ஆகிய பகுதிகளில் இருந்து கலந்து கொண்ட வாலிபர்கள் இயேசுவுக்காக எழும்பி பிரகாசிக்கும் தூண்களாக செயல்பட அர்ப்பணித்தனர். அவர்கள் அதில் நிலைத்திருந்து கனி கொடுக்க ஜெபிக்கும்படி உங்களை அன்போடுகூட கேட்டுக் கொள்கிறேன். தாளவாடி குல்லுரு பணித்தளத்தில் ஆலயம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. இதில் இளைஞர்கள் மழை என்று பார்க்காமல் உற்சாகத்தோடு கலந்து கொண்டனர். அடுத்த பத்து ஆண்டிற்கான முதல் ஆலய அடிக்கல் நாட்டுவிழாவாக இது அமைந்தது. இதே போன்ற Pillars-Meetingங்கும், பயிற்சியும் தொடர்ச்சியாக பல மாவட்டங்களில் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

### ஆலய ஆராதனை

சென்னை தாம்பரம் – சந்தோஷபுரத்தியுள்ள ஆலயத்தில் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ள கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை. நூற்றுக்கணக்கான பிள்ளைகள் தரிசனத்தோடு தேவ பணி செய்வதற்கு தேவனுடைய சீஷர்களாக முன்வந்து அர்ப்பணித்தனர்.

### MIM புதிய மைல் கல்

சென்னை அலுவலகத்தில் மீடியாவிற்கான புதிய அரங்கம் ஜெபத்தோடு திறந்து வைக்கப்பட்டது. Scripture Unionனில் பணியாற்றி ஓய்வு பெற்ற அன்பு அண்ணன் விசுவாசம் அவர்கள் ஜெபிக்க, டாக்டர் ராஜாசிங் அவர்கள் திறந்து வைத்தார்கள். மிஷன் இந்தியா இயக்கத்தின் தரிசனத்தையும், வருகிற நாட்களில் செய்ய வேண்டிய திட்டப்பணிகளையும் பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். ஒன்பது ஆண்டுகள் நிறைவேற்றிய பணிகளை குறித்த ஆவணப்படமாக வெளியிடப்பட்டது. அண்ணன் விசுவாசம் அவர்கள், **"நீ போகும் தூரம் வெகுதூரம்"** என்று எலியாவிற்கு தேவதூதன் கூறியதுபோல, நின்று விடாமல் தொடர்ந்து ஓடி செயல்பட வாழ்த்தினார்கள். "மிஷனெரியை தடுத்து


















விடலாம்; மீடியா பணியை தடுத்துவிட முடியாது" என்று கூறினார்கள். டாக்டர் ராஜாசிங் அவர்கள் "ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் கர்த்தர் செய்கிறார், ஆரம்பகாலம் முதல் இந்நாள் வரை ஊழியத்தின் வளர்ச்சியை பார்க்கும்போது தேவன் நடத்தி வந்த பாதைகளை எண்ணி துதிக்கின்றேன் என்று பகிர்ந்து கொண்டார். டாக்டர் ஜிஷியா அவர்கள், "மக்கள் மீடியாவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் இந்த நவீன தொழில் நுட்ப காலத்தில், கிறிஸ்தவ மீடியாவின் பங்கு என்ன? அதின் அவசியம் என்ன?" என்பதை குறித்து பகிர்ந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியின் நிகழ்வை சகோதரி நிருபா ஏசுவடியான் மற்றும் சகோதரி ஏஞ்சலின் ஸ்டேனி இருவரும் தொகுத்து வழங்கினர். சென்னை இளைஞர்கள் பாடல்களை பாடி உற்சாகப்படுத்தினார்கள். இளைஞர்கள் ஆர்வத்தோடுகூட அத்தனை காரியங்களையும் ஒழுங்கு செய்தனர். புதிய புதிய திட்டங்களை செயலாற்ற அர்ப்பணத்தோடு செயல்பட ஆரம்பித்தனர். இன்னும் ஸ்டுடியோவிற்கு தேவைப்படுகின்ற மீடியா உபகரணங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## ஆலய கட்டுமான பணிகள்

பஞ்சாப் மாநிலம் பரேட்டா பணித்தளத்தில் நடைபெற்று வருகிற ஆலய கட்டுமானப் பணிகள், ஜார்கண்ட் சிறுவர் விடுதியின் சிற்றாலயகட்டுமானப்பணிகளும்சரியான நேரத்தில் கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள். கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்படவுள்ள தாளவாடியின் ஆலய கட்டுமானப் பணிக்கு தேவையான மணல், சிமெண்ட், கல், கம்பி என அனைத்து தேவைகளும் சந்திக்கப்படவும், இப்பணிகள் அனைத்தும் தடையில்லாமல் தொடர்ச்சியாக நடைபெறவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## சமுதாய மேம்பாட்டு பணிகள்

அஸ்ஸாம் மவுண்ட் சீனாய் பள்ளிக்கு உடற்பயிற்சி உபகரணங்கள், கணினி தேவைப்படுகிறது. தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள். ஜார்கண்டில் இயங்கி வரும் இரண்டு விடுதி பிள்ளைகளும் பள்ளிக்கு செல்ல ஆரம்பித்து விட்டனர். பெண்கள் விடுதி விரைவில் கட்டிமுடிக்கப்படவும் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## பணித்தள விஜயம்

மதுரை சகல பரிசுத்தவான்கள் ஆலயத்திலிருந்து குழுவாக சபை போதகரோடு தாளவாடி பணித்தளத்திற்கு விஜயம் செய்தனர். இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்தோடு பங்கு பெற்றனர். தரிசனம் தொடர்ந்து நிறைவேற மிகுந்த பாரம் கொண்டு தரிசனத்தை பெற்று சென்றனர்.

## செயற்குழு கூடுகை

மிஷன் இந்தியா இயக்கத்தின் செயற்குழு கூடுகை நடைபெற்றது. பல்வேறு இடங்களில் இருந்து தலைவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் தங்களுடைய கருத்தை தெரிவித்து புதிய காரியங்களையும் பகிர்ந்து கொண்டனர். அடுத்த பத்து ஆண்டுகளில் செய்ய வேண்டிய சிறப்பான பணிகளை குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டு, பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

## ஜூலை மாத கூடுகைகளுக்காக ஜெபியுங்கள்

ஜார்கண்ட் பணித்தள பயணம், ஊட்டியில் நடைபெறும் கூடுகைகள், சென்னை MIM Pillars Meeting, பாவூர்சத்திரம் சிறப்பு துதி ஆராதனை போன்ற இக்கூடுகைகளை கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

உங்களுக்காக தொடர்ந்து அனுதினமும் கர்த்தரிடத்தில் மன்றாடுகிறோம். உங்கள் ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். புதிய பங்காளர்களை அறிமுகப்படுத்துங்கள். ஆண்டவரின் நாமம் நம்மூலமாக நிச்சயம் மகிமைப்படும் என்பதில் சந்தேகமில்லை. கர்த்தர் நம்மையும் நம்முடைய ஊழியங்களையும் தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்

**அ.ஏசுவடியான்**

# The Star Fish



**Star Fish** என்னும் அழகிய கடல்வாழ் உயிரினம் அட்லாண்டிக் கடலில் அதிகம் காணப்படுகின்றது. இது **Star Fish** என்று அழைக்கப்பட்டாலும் அது மீன் அல்ல. அது முட்தோலி என்ற இனத்தைச் சேர்ந்தது. இது 1 மீட்டர் அளவு வளரக் கூடியது. அதற்கு 5 கரங்களும், மத்தியில் ஒரு வாயும் உண்டு. ஒவ்வொரு கரங்களிலும் அநேக சிறிய ஒட்டு உறிஞ்சி உறுப்புகள் (Suckers) உண்டு. இந்த நட்சத்திர மீன்கள் நத்தை, புழுக்கள், சிப்பிகள் போன்றவற்றை உணவாகக் கொள்ளும். உணவு கிடைக்கப்பெற்றவுடன் தன் கரங்களை உணவினைச் சுற்றி வலுவாகப் பிடித்து கடினமான கூட்டை உடைத்த பின், அதன் வயிற்றுப் பகுதியில் காணப்படும் வாய்வழியாக வெளியே வந்து உணவை கவ்வி எடுத்துக் கொள்கிறது. அதன் பின் உணவை செரிமானம் செய்கிறது. அதன் உணவை சாப்பிட்டு முடித்தபின் வயிறு மறுபடியும் உள்ளே சென்று விடுகிறது.

இந்த நட்சத்திர மீனுக்கு இன்னும் சில அபூர்வ குணங்களும் உண்டு. அது தாக்கப்படும்போது சில சமயங்களில் தன் கரங்களை இழந்து விடுகின்றன. ஆனால் இம்மீனுக்கு இந்த விஷயம் ஒரு பிரச்சனையே இல்லை. ஏனென்றால் இழந்த கரங்களுக்குப் பதிலாக புதிய கரங்களை தானாகவே உருவாக்கிக் கொள்கின்றன. அது மாத்திரமல்லாமல் முறிந்த துண்டு கரத்திலிருந்து புதிய **Star Fish** உருவாகிறது. **Star Fish**கள் அதிகமான கால கட்டங்களில் மீனவர்கள் அதை சிறிய துண்டுகளாய் வெட்டிய போதும் ஒவ்வொரு துண்டும் புதிய **Star Fish** ஆக உருவெடுத்து அதன் எண்ணிக்கையை அதிகரித்தது.

நம் தேவனின் படைப்பு எத்தனை மகத்துவமுள்ளது. அநேக பாவங்கள் செய்தால் நம் உள்ளம் கறைபட்டும், உடைந்தும் காணப்படுகின்றது. பலவித இரகசிய பாவங்களாலும், இரகசிய உறவுகளாலும், உள்ளான வாழ்வு உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு இருந்தாலும் நீ தேவனிடம் திரும்பினால், அந்த **Star Fish** வாழ்வில் ஏற்படும் புதிய வாழ்வைப் போல உன் வாழ்விலும் அவர் புதிய மாற்றத்தை நிறைவேற்றுவார். 1 கொரி 5:17—ல் எழுதியிருக்கிறது போல நம் வாழ்வில் பழையவைகளையெல்லாம் மாற்றி புதிய வாழ்வு தர தேவன் காத்து நிற்கிறார். நீ செய்ய வேண்டியது எல்லாம் அவருடைய தொடுதலுக்கு ஒப்புக்கொடுப்பதே. ஏனென்றால் நாறிபோன லாசருவை உயிர்ப்பித்த தேவனாகிய கர்த்தர் உன்னோடு உண்டு. கை, கால்கள் செயலிழந்து ஒரு மரக்கட்டை போன்ற நிலையில் இருந்த திமிர்வாதக்காரனின் வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தைக் கொண்டு வந்து அதே தேவன் இன்றும் ஜீவிக்கிறார் என்பதை மறவாதே!


## ஆலயம் கட்ட

தற்சமயம் அஸ்ஸாம், ஜம்மு, ஜார்கண்ட், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் ஆலய கட்டுமானப் பணிக்கு தேவை உள்ளது. குடும்பமாக, சபையாக, ஜெபக்குழுவாக இப்பணியை பொறுப்பெடுத்து தேவ இராஜ்ஜிய பணியில் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

ஒரு கிராம ஆலயம் 8 இலட்சம் ரூபாய்

ஒரு நடுத்தர ஆலயம் 15 இலட்சம் ரூபாய்

ஒரு மிஷன் சென்டர் ஆலயம்
30 இலட்சம் ரூபாய்



Mission India Movement
State Bank of India, A/c 37734755943
IFSC: SBIN0018670
Branch code: 018670

Mission India Movement
Karur Vysya Bank,
A/c 1877135000000833
IFSC: KVBL0001877
Branch code: 001877

Gpay Number:
9444393227

Kindly acknowledge us once you transfer the offering.

# சுவடுகள்

நான் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் கல்லூரி விடுதியில் என் அறைதோழனாக இருந்த சங்கர் நாராயணன் மூலம் இயேசுவை ஏற்றுக் கொண்டேன். ஓசுருக்கு அருகாமையிலுள்ள மத்தகிரியில் இருக்கும் அரசாங்க கால்நடைப் பண்ணையில் பயிற்சி பெறச் சென்றபோது அந்த புழுதி மண்டிய வெளியில் அந்த அற்புதம் நடந்தது. எனக்குள் பிறந்த இந்த புது திருப்பம் புதுப்புனலாக எங்கள் கல்லூரியையே பற்றிப் பிரவாகிக்கத் துவங்கியது. அந்த நாட்களில் தமது ஊழியத்தைச் செய்யும்படி தேவன் அடிக்கடி என்னை பாரப்படுத்துவார்.

ஒரு நாள் புரசைவாக்கப் பகுதியில் காய்கறி வாங்கிவிட்டு திரும்பிக் கொண்டிருந்தேன். “என்னைப்பற்றி பாடு”, என்று என் தேவன் என்னைப் பணித்தார். “தெருவிலா?” என் றேன்! “ஆம்” என்றார்! தேவ னோடு தர்க்கம் செய்து யார் தான் வெல்ல முடியும்! காய்கறி பையை காலுக்கிடையில் வைத்துவிட்டு, வெட்கத்தை போக்க கண்களை மூடிக் கொண்டு, இயேசுவின் திருப்புகழைப் பயமும் பக்தியும் கலந்த பரவசத்தோடு பாடினேன். பாடல் முடிந்தது! விட்டால் போதுமென்று கூட்டத்தோடு கூட்டமாக வீடு திரும்பினேன்.



அடுத்த முறையும் இதே போன்றதொரு சூழ்நிலையில் “என்னைப் பற்றி பாடு” என்றார். அந்த நாள் பாடி முடித்து விட்டு வெடுக்கென்று நான் நகர்ந்த போது ஒரு கை என் தோளைப்பற்றிக் கொண்டு “அந்த இயேசுவை எனக்கு விபரமாகச் சொல்” என்றது. திரும்பிப் பார்த்தேன், தேவை யுள்ள நபர் என்னை ஆர்வமுடன் பார்த்தார். என் அச்சம் கலைந்தது. தெரு ஓரம் இரண்டுபேரும் அமர்ந்தோம். புதிய ஏற்பாட்டைத் திறந்து இயேசுவே தெய்வமென்றேன், பின் இருவரும் கண்ணீர் மல்க ஜெபித்தோம். அந்த நாளை வாழ்நாளில் என்னால் மறக்கவே முடியாது.

புரசைவாக்கம் தெரு வீதிகளில் துவங்கிய எனது சுவிசேஷப்பணி இன்றும் தொடருகிறது. வாழ்க்கையின் வழிப்பயணத்தில் எதிர்படும் எல்லோருக்கும் நித்திய இராஜா இயேசுவின் நிலை மாறாத இராஜ்ஜியத்தை நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். நீங்களும் துணிந்தால்போதும்...

டாக்டர் கமலேசன் அவர்கள் சாட்சியிலிருந்து...

# இந்தியாவின் மறுமலர்ச்சியில் இளைஞர் இயக்கமாய்...

## சீஷனாகு, சீஷனாக்கு

என்பதே இதன் நோக்க வார்த்தைகள். நாம் அவருக்கு சீடராக வேண்டும். அவ்விதம் பிறரையும், சீஷராக்கிட வேண்டும் என்பதே இதன் பொருள். இதன் தனித்து-வம் உண்மை, நேர்மை, கடின உழைப்பு என்பதோடு வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் உலகில் தேவனை நேசிப்பதும், மனிதர்களுக்கு உதவி செய்வதும் என்று இவ்வியக்கம் வளர்ந்து வருகின்றது.

## தொலைதூர திட்டம்

இளைஞர்களின் மறுமலர்ச்சியே எமது பிரதான இலக்கு!

1. ஒரு கோடி மக்கள்
2. ஒரு இலட்சம் கிராமங்கள்
3. ஓராயிரம் திருச்சபைகள்
4. ஒரு நூறு மிஷனெரிகள்

என தூர தரிசனத்துடன் இப்பணியை நிறைவேற்றுகின்றது.

## தேவையில் பங்கெடுங்கள்

1. ஒரு ஊழியரை ஆதரிக்க ரூ.4000/-
2. பணித்தள ஊழிய தேவைகளை சந்திக்க ரூ.2000/-
3. ஒரு மிஷனெரி குழந்தையை ஆதரிக்க ரூ.850/-
4. பழங்குடி இன ஒரு குழந்தையை ஆதரிக்க ரூ.500/-
5. ஊழியர்களின் பிள்ளைகளுக்கான ஒரு வருட கல்வி கட்டணத் தேவை ரூ.6 இலட்சம்
6. சிறிய ஆலயம் கட்டிய ரூ.7 இலட்சம் (15x25)
7. நடுத்தர ஆலயம் கட்டிட ரூ.15 இலட்சம் (20x40)
8. மிஷன் மைய ஆலயம் 40 இலட்சம்

**காணிக்கை / காசோலைகள் மற்றும் நன்கொடைகள் அனுப்ப**

| | |
|---|---|
| Mission India Movement<br>State Bank of India<br>A/c 37734755943<br>IFSC: SBIN0018670<br>Branch code: 018670 | Mission India Movement<br>Karur Vysya Bank<br>A/c 1877135000000833<br>IFSC: KVBL0001877<br>Branch code: 001877 |

Seeshan : A/c No : 10080118968
ISC : IDFB0080121 | IDFC First Bank
Kilpauk Branch,Chennai

*Donation are exempled under 80 - G of the Income Tax Act 1961*

MIM chennai

UPI ID: jesumimchennai@okicici

Gpay Number: 9444393227

*Kindly acknowledge us once you transfer the offering.*

MIM chennai

UPI ID: jesumimchennai-1@okaxis

**MISSION INDIA MOVEMENT**
No. 27, Angel House, 2nd Floor, Taylor's Estate, 2nd street, Kodambakkam, Chennai - 600024



# ஆபகூக்

தீர்க்கர் ஆபகூக் திறந்த கண்களை உடையவராக இருந்தார். ஆகவே அவர் தாம் கண்ட காட்சிகளினால் மனதில் பாரம் பெற்றார். ஆபகூக் ஆழ்ந்து சிந்திக்கிறார். கவலைக் கொள்கிறார். யூதா சாம்ராஜ்ஜியம் அரசியல் ரீதியாகவும் பொருளாதார அடிப்படையிலும் ஆவிக்குரிய நிலையிலும் சீர்கேடு அடைந்துக் கொண்டிருந்தது. தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தையை அவர்கள் உதாசீனப்படுத்திவிட்டபடியினால் பாவம் வெள்ளம் போல் பெருகினது. ஆபகூக்-க்கு தேவன் வரப்போகும் பாபிலோனிய முற்றுகையை குறித்து முன்னறிவிக்கிறார். யூதா மக்கள் அடிமைப்பட போகிறார்கள் என்ற செய்தி தீர்க்கதரிசியை குழம்பச் செய்கிறது. தேவனுடைய கிரியையை புரிந்துக் கொள்ள முடியாமல் திகைக்கிற வேளைகளில் நாம் என்ன செய்ய கூடுமோ அதைத்தான் ஆபகூக்கும் செய்கிறார். அவரது சேனையை தேவனுடைய சந்நிதிக்கு கொண்டுச் செல்கிறார். அவரது மனப்போராட்டத்தின் அடிப்படையில் தேவனுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்களை சமர்ப்பிக்கிறார்.

## முதல் குற்றச்சாட்டு :

### தேவன் கண்டும் காணாதவர்போல் இருக்கிறார்.

முதலாவதாக ஆபகூக் தேவன் பிரச்சனைகளை கண்டும் காணாததுபோல கவலையற்றிருப்பதாக குறைகூறுகிறார். "கர்த்தாவே, நான் எதுவரைக்கும் கூப்பிடுவேன்", என்று அவர் ஜெபத்தில் கதறுவதை நாம் பார்க்கிறோம். தேவனே எனக்கும் என் ஜனத்துக்கும் உதவி செய்ய மாட்டீரோ? என்று உதவிக்காக மன்றாடுகிறார். நாமும் கூட சில நேரங்களில் தேவனை நோக்கி கெஞ்சி கதறும் போது ஏன் கிரியை செய்யாமல் மௌனமாக இருக்கிறார் என்று சிந்திக்கிறோம். ஒருவேளை நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் சமுதாயம் கூட ஆபகூக்கின் நாட்களில் பிளந்து சரிந்து இருந்ததைப் போல துவண்டுக் கொண்டிருக்கக்கூடும். அன்றைய சமுதாயத்தில் காணப்பட்ட ஒழுக்கக்கேடுகளும் அநீதிகளும் அவல நிலையும் இந்நாட்களிலும் சரளமாக இருப்பதை நாம் கண்டு மனமடிகிறோம்.

ஆபகூக் தேவனிடத்தில் வைராக்கியமாய் கெஞ்சியும் அவரது ஜெபத்திற்கு பதில் கிடைக்காமல் போவதை நாம் பார்க்கிறோம். யூதா வம்சத்தார் விழித்தெழுந்து, மனம்திரும்பி தங்களை பரிசுத்தப்படுத்திக் கொண்டு பாவத்திற்கு எதிராக தங்களைக் காத்துக் கொள்ளமாட்டார்களா என்ற பெரிய எதிர்பார்ப்போடு அவர் ஜெபிக்கிறார். ஆனால் தேவனோ பதில் தந்தபாடில்லை. அவர் கவலையற்றவராக தோன்றுகிறார்.

## இரண்டாவது குற்றச்சாட்டு :

### தேவன் கிரியை செய்யாமல் இருக்கிறார்.

தேவன் கவலையற்றிருப்பதோடு கிரியை செய்யாமல் செயலிழந்து நிற்கிறார் என்றும் ஆபகூக் குற்றம் சாட்டுகிறார். 'எவ்வளவு காலம் கிரியை செய்யாமல் இருப்பீர்?' என்று கேட்காமல்,'ஏன் கிரியைச் செய்யாமல் இருக்கிறீர்?' என்று கேட்கிறார். 'ஏன் மனிதர்களின் பாவங்களை நியாயம் தீர்க்காமல் இருக்கிறீர்?' என்று கேட்கிறார். அன்றைய நாளில் பதவியிலிருந்தவர்கள் தங்களுக்குக் கீழே இருந்தவர்களை நெருக்கினார்கள். எங்கும் அழிவு காணப்பட்டது. குடும்பங்கள் பிரிக்கப்பட்டன. வீடுகள் சூறையாடப்பட்டன. யூதா இராஜ்ஜியம் சிதறுண்டுப்போனது. அஸ்திபாரங்கள் அசைந்தன. அநீதிகளும் வன்முறைகளும் மலிந்து கிடந்தன. சட்டம் உறங்கிக் கொண்டிருந்தது. நீதிக்காக போராட வேண்டிய வழக்கறிஞர்கள் சட்டத்தில் காணப்பட்ட விரிசல்களை நீதியைப்புரட்டுவதற்கு பக்குவமாக உபயோகித்தனர். இன்றைய நிலைக்கும் அன்றைய நிலைக்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லாதிருந்தது. ஆகவேதான் தீர்க்கர் ஆபகூக், தேவன் கண்டும் காணாமலிருக்கிறார்,'இன்னும் எதுவரைக்கும் கூப்பிடுவேன்? ஏன் செயலிழந்து நிற்கிறீர்? நீர் இரட்சியாமலிருக்கிறீரே' என்றெல்லாம் முறையிடுகிறார்.

தேவன்செயலிழந்தவராக ஆபகூக்குக்கு தென்படுகிறார். ஆனால் தேவனோ யூதா ஜனங்கள் எதை விதைத்தார்களோ அதன் பலனை அவர்கள் அறுக்கும்படியாக அவர்களை கைவிட்டிருந்தார். விக்கிரக வணக்கத்தை பின்பற்றினதின் மூலம் தேவனை கனவீனப்படுத்திய அவர்களது துணிச்சலின் பலனைத்தான் அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். தேவ ஆலயத்தின் போதகங்களை உதறிவிட்டதினால் வந்த தண்டனையை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். பொய் சமாதானத்தையும் மாய்மாலமான வாழ்க்கை வளத்தையும் யூதா மக்கள் விரும்பினபடியால் அவர்கள் அதைப் பெற்றார்கள்.

## மூன்றாவது குற்றச்சாட்டு :

### தேவன் ஒரு நிலையாய் நின்று செயல்படுவதில்லை.

தேவன் ஒரு நிலையாய் நின்றுச் செயல்படுவதில்லையென்று ஆபகூக் குற்றம் சாட்டுகிறார் (1:5-17). தேவனே, அக்கிரமக்காரராகிய கல்தேயர் என்னும் புறஜாதியாரைக் கொண்டு உம் ஜனமாகிய இஸ்ரவேலரை நீர் எப்படி தண்டிக்கக்கூடும்? நாங்களாவது ஓரளவுக்கு உம்மை சேவிக்க முயலுகிறோம். ஆனால் கல்தேயர் முற்றிலும் உமக்கு விரோதமாக இருக்கிறார்களே? என்று தீர்க்கர் திகைக்கிறார். இத்தகைய முறையீடுகளை இன்றும் நாம் கேட்க முடிகிறது. ஏன் தேவன் எனக்கு ஒரு வேலையை கொடுக்கக் கூடாது? ஏன் இன்றே என் வியாதியை சுகப்படுத்தக் கூடாது? என் துன்மார்க்கனான மகனை மனந்திரும்பச் செய்யக்கூடாது? ஏன் பிரிந்திருக்கும் என் குடும்பத்தை தேவன் ஒன்று சேர்க்கக்கூடாது? இப்படிப்பட்ட ஏராளமான கேள்விகள் உண்டு. இதற்கு ஆணித்தரமான பதிலை ஆபகூக் 2:4-ல் பார்க்கிறோம்." விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்பதே அந்த வாக்குத்தத்தம்.

## விவரிக்கப்பட்டாலும்
### விசுவாசியாத அற்புத கிரியை:

நீங்கள் ஒரு மிக முக்கியமான காரியத்திற்காக அல்லது பிரச்சனைக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் தேவனோ கேளாதவர் போலவும், கிரியை செய்யாதவர் போலவும் தோன்றலாம். அவரது காதுகள் திறந்தே உள்ளன. அவரது கரத்தை யாரும், எதுவும் கட்டி வைக்க முடியாது. ஆபகூக்-க்கு தேவன் தெளிவாக விளக்கினதை உங்களுக்கும் இன்று உறுதியாகக் கூறுகிறார்; "நான் கண்டிருக்கிறேன். நான் செயலாற்றுகிறேன். என் தீர்மானங்களை குறித்த காலத்தில் நிறைவேற்றுவேன்".

## தேவனுடைய கிரியை
### விவரித்தாலும் விசுவாசிக்க முடியாத அற்புதம்:

தேவனுடைய கிரியைகள் அற்புதமானவை. மனிதனின் அற்ப விசுவாசத்திற்கு அப்பாற்பட்டவை. ஆகவேதான் தேவன் தம்முடைய தீர்மானங்களை எப்பொழுதும் மனிதனுக்கு விவரித்து சொல்வதில்லை. நம்மால் தாங்கிக் கொள்ளக்கூடிய, புரிந்து கொள்ளக்கூடியவற்றை மட்டும் அவர் நமக்கு தெரியப்படுத்துகிறார். விசுவாசிகள் விளக்கங்களின் அடிப்படையில் வாழுகிறவர்கள் அல்ல, தேவனுடைய வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் வாழுகிறவர்கள்.

ஆபகூக்கை குறைகூறுமுன் நாமும்கூட எவ்வளவு முறை இப்படி செய்திருக்கிறோம் என்று சிந்திப்போம். தேவன் ஒரு நிலையாய் செயல்படுவதில்லையே என்று எத்தனை முறை சிந்தித்திருக்கிறோம். தேவனற்ற ஜனங்கள் அழைத்து தேவனின் பிள்ளைகள் நெருக்கப்படும்போதெல்லாம் இந்த கேள்வி நமக்குள் எழும்பாமல் இருந்ததில்லை. நம்முடைய பிள்ளைகள் வியாதியிலும், வறுமையிலும், பெலவீனத்திலும் வாடும்போது புறஜாதியாரின் பிள்ளைகள் சுகபோகமாய் வாழ்ந்து திரியும்போதெல்லாம் நம் மனம் தேவ சந்நிதியில் தேவனை குறைகூறாமல் இருந்ததேயில்லை. ஆபகூக் தேவனோடு போராடிக் கொண்டிருந்தார்.

நீங்களும் ஆபகூக்கைப் போல் தேவனுடன் தர்க்கம் செய்து கொண்டிருக்கிறீர்களா? உங்களை திருப்தி செய்யும் வகையில் தேவனுடைய மனதை மாற்றமுனைந்திருக்கிறீர்களா? அந்த முயற்சியை இன்றே உடைந்த உள்ளத்துடன் தவிர்த்துவிடுங்கள். ஏனென்றால் ஆபகூக்குக்கு தேவன் தந்த மாபெரும் செய்தி நமக்கும் இன்று பொருந்துகிறது. "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்", என்பதே அந்த ஊக்கச் செய்தி. ஆழ்ந்த சிந்தனையுடன் கவலை கொண்டிருந்த தீர்க்கதரிசி முடிவில் தேவனை துதித்து ஆராதனை செய்கிறார். துக்கத்தின் பள்ளத்தாக்கிலிருந்து வெற்றி துதிகளின் உச்சாணிக்கு தம்மை உயர்த்திக் கொள்ளுகிறார். இந்த மாற்றம் அவர் உள்ளத்தில் எப்படி வந்தது? தேவனிடத்தில் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு அவரை நம்பி காத்திருக்கும் அனுபவத்தை தீர்க்கர் கற்றறிகிறார், "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்" (சங் 46:10). தேவனுடன் தர்க்கிக்காமல் அவருக்கு செவி கொடுப்பே-ாம். அவரை நம்புவோம். அவர் குறித்த காலத்தில் நமக்காக கிரியை செய்வார். ஜெயத்தை கட்டளையிடுவார்.

# தொலைதூர திட்டம்

மிஷன் இந்தியா இயக்கத்தின்

**இதுவரை...**

| |
|---|
| 7 மிஷன் மையங்கள் |
| 81 பணித்தளங்கள் |
| 76 ஊழியர்கள் |
| 192 ஆராதனைக் குழுக்கள் |
| 1 ஆலயம் |
| 11 மாநிலங்களில் ஊழியம் |
| 7650 ஆத்துமாக்கள் |
| 400 அங்கத்தினர்கள் |

என தேவன் நடத்தி வந்த பாதைகளை எண்ணி அவரை மனதாரத் துதிக்கிறோம்.

**2026 ம் ஆண்டின் இலக்குகளுக்காக ஜெபிப்போம்**

சந்திக்கப்பட வேண்டிய கிராமங்கள் : 850
ஒரு கிராமத்தில் சுவிசேஷ கூட்டம் நடத்திட : ரூ.3,000/-
(இந்த ஆண்டு 850 கிராமங்கள்)

**இம்மாதம் நாம் ஜெபிக்க வேண்டிய மிஷன் மையம் கர்நாடகா**

*பணித்தளம் : ஷிகான்*
*மிஷனெரி : தன்யா சுந்தர் நாயக்*
*மனைவி : பிரமோதினி*
*பிள்ளைகள் : மெர்சி ஏஞ்சலின், ரேமா ரோசலின்*

## ஜெபிப்போம்

மதமாற்ற தடை சட்டம் விலக்கப்பட்டிருந்தாலும் ஊழியம் செய்வதற்கு இம்மாநிலத்தில் கடுமையான சூழ்நிலை உள்ளது. விடுதலையோடு ஊழியர்கள் தங்கள் பணிகளை செய்ய ஜெப்ப்போம். கைபிரதி ஊழியம், ஒலி, ஒளி நிகழ்ச்சி மூலம் சுவிசேஷத்தை அநேக கிராமங்களில் அறிவித்து வருகிறார்கள். இதில் நல்ல விளைவுகளை தேவன் தர ஜெப்ப்போம். ஊழியரின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்படவும் ஜெப்ப்போம்.

# மிஷன் இந்தியா இயக்க ஊழியங்களுக்காக

# ஜெபிப்போம்

**கடந்த மாதம் முழுவதும் தேவன் நம்மை பாதுகாத்து வழி நடத்தியதற்காக அவரைத் துதிப்போம்.**

01 ஊழியத்தினிமித்தம் பல்வேறு இடங்களுக்கு பிரயாணப்பட்ட நேரத்திலெல்லாம் தேவகரம் உடனருந்ததற்காக நன்றி செலுத்துவோம்.

02 கடந்த மாதம் ஊழியர்கள், அவர்கள் குடும்பத்தினர் மற்றும் ஜார்கண்ட் சிறுவர் விடுதி சிறுவர்கள் சுகவீனமடைந்தனர். தேவன் நம் ஜெபத்தை கேட்டு சுகம் தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

03 பஞ்சாப் பணித்தளத்தில் ஊழியம் செய்யும் சகோதரர் லாலீ சிங் அவர்களுக்கு ஏற்பட்ட சாலை விபத்தில் காயம் அடைந்துள்ளார். அவர் பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.

04 தாளவாடி பணித்தளத்தில் சகோதரர் பேட்ரிக் அவர்களின் மனைவி நவோமி அவர்களுக்கு காலில் ஏற்பட்ட புண்ணினால் அறுவை சிகிச்சையும், பிளாஸ்டிக் சர்ஜரியும் செய்யப்பட்டுள்ளது. அவர் பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.

05 சென்னை மீடியா அலுவலக கட்டுமான பணிகள் நிறைவடைந்து பணிகள் துவங்கியுள்ளது. மீடியாவிற்கு தேவையான உபகரணங்கள் வாங்க தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

06 மீடியா பணிகள் அனைத்தும் நேர்த்தியாக நிறைவேற்றப்பட ஜெபிப்போம்.

07 நல்ல அனுபவமுள்ள, அர்ப்பணமுள்ள மீடியா ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். தேவன் ஏற்ற நபரை தர ஜெபிப்போம்.

08 புதிதாக ஊழியத்தில் இணையவிருக்கும் 14 மிஷனெரிகளுக்கான ஆதரவாளர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

09 ஊழியம் வளர வளர ஜெபத்தேவைகளும் அதிகரித்து வருகிறது. ஜெபவீரர்கள் அநேகர் எழும்ப ஜெபிப்போம்.

10 வருகின்ற நாட்களில் நடைபெறுகின்ற ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

11 முன்னேற்ற பணியில் உதவி செய்கின்ற அனைத்து ஊழியர்களுக்காகவும் ஜெபிப்போம். இவர்கள் மூலமாக அநேக ஜெப வீரர்கள், ஆதரவாளர்கள் எழும்ப ஜெபிப்போம்.

13 மதுரை, திருச்சி, சென்னை, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஊழியம் செய்வதற்கு முன்னேற்ற பணியாளர்கள் தேவைப் படுகிறார்கள். தேவன் ஊழியர்களை எழுப்பித்தர ஜெபிப்போம்.











14 ஜார்கண்ட் சிற்றாலய கட்டுமானப் பணிக்காக ஜெபிப்போம். இக்கட்டுமானப் பணிக்கு உதவி செய்ய ஒப்புக் கொண்டுள்ள மதுரை ஆல்செயிண்ட் ஆலயத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். இப்பணிகள் விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

15 ஜார்கண்ட் விடுதி கட்டுமானப் பணிகள் விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

16 சிறுவர் விடுதியின் பெண்களுக்கான அறை கட்டுமானப் பணிக்காகவும், விரைவில் பணிகள் நிறைவடையவும், தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

17 அஸ்ஸாம் பள்ளியின் பிள்ளைகளுக்கான உடற்பயிற்சி உபகரணங்கள், கழிப்பறை வசதிகளும் செய்யப்பட வேண்டியுள்ளது. இதன் தேவைகள் சந்திக்கப்படவும், விரைவில் பணிகள் முடிக்கப்படவும் ஜெபிப்போம்.

18 தாளவாடி ஆலய கட்டுமானப் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

19 தாளவாடி கட்டுமானப் பணியை ஒருங்கிணைத்து செய்ய ஏற்ற நபரை தேவன் ஏற்படுத்தித்தர ஜெபிப்போம்.

20 ஜம்முவில் ஆலயம் கட்ட விரைவில் நிலம் கிடைக்கவும், அது வாங்கப்படவும், தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

21 புதிய கல்வியாண்டிற்குள் நுழைந்திருக்கிற அஸ்ஸாம் பிள்ளைகள், ஜார்கண்ட் விடுதி பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.

22 பிள்ளைகள் அனைவரும் நன்கு படிக்கவும், படிப்பின் அனைத்து தேவைகளும் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

23 சீஷன் பல்நோக்கு மையத்திற்கான நிலம் கிடைக்க ஜெபிப்போம்.


24 இம்மையத்திற்கான தேவைகளை சந்திக்கும் நபர்களை தேவன் எழுப்பித்தரவும், தேவனின் சித்தப்படி சரியான நேரத்தில் நேர்த்தியாக கட்டப்படவும் ஜெபிப்போம்.

25 நமது ஊழியத்தில் இணைந்து தேவனுடைய பணியை செய்து வரும் ஜெபக்குழு தலைவர்கள், ஒவ்வொரு பகுதி தலைவர்களுக்காகவும், கொடுத்துத் தாங்கும் அன்பர்களுக்காகவும் ஜெபிப்போம்.

26 இவர்களின் பணியை தேவன் ஆசீர்வதிக்கவும், இவர்களின் குடும்பத்தை தேவன் ஆசீர்வதிக்கவும், தேவைகள் சந்திக்கப்படவும், இவர்களின் கையின் பிரயாசத்தை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.

27 இம்மாத ஊழியத்திற்காக ஜெபிப்போம். ஊழியத்தின் நிமித்தமாக செய்யும் அனைத்து பிரயாணங்களையும் தேவன் வாய்க்கப்பண்ண ஜெபிப்போம்.

28 இம்மாத ஊழியத்திற்கு இருக்கும் தடைகள் அனைத்தையும் தேவன் மாற்றித்தர ஜெபிப்போம்.



# ஜெபத்தோடு விதைக்கிறோம்...

# துதியோடு அறுக்கிறோம்...

## பஞ்சாப்



**புத்தலாடா / சகோ. ஈஸ்டர் ராஜ்குமார் குடும்பம், சகோ.சுச்சா குடும்பம்**

**PRAISE GOD** **சந்தித்த வீடுகள் : 20, வீட்டுக் கூடுகைகள் : 20, சந்தித்த கிராமங்கள் : 2, உபவாச கூடுகைகள் : 8, திறந்த வெளி கூடுகைகள் : 1 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** சகோதரி ஜாஸ்வீர் அவர்களுக்கு பஞ்சாப் போலீஸில் வேலை கிடைத்ததற்காக தேவனை துதிப்போம். வேலை நிமித்தமாக வெளியூர் சென்றிருந்த விசுவாசிகள் மீண்டும் பாதுகாப்பாக திரும்பியதற்காக தேவனை துதிப்போம். சகோதரி அஞ்சலி அவர்கள் வேலை செய்த இடத்திலேயே மீண்டும் வேலை கிடைத்ததற்காக தேவனை துதிப்போம். டைபாய்டு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த ஈபிரில் குணமானதற்காக தேவனை துதிப்போம். சோனியாவின் தாயாரது அறுவை சிகிச்சை நல்ல முறையில் முடிவடைந்ததற்காக தேவனை துதிப்போம்.

**PRAY** *without ceasing* கீழே விழுந்ததில் கால் மற்றும் இடுப்பில் காயம் ஏற்பட்டதால் வலியால் அவதியுறும் சகோதரி சிமர்ஜீத் கோர் குணமாக ஜெபிப்போம். சகோதரி சோனியா அவர்களுக்கு தேவன் குழந்தை பாக்கியம் கொடுத்து ஆசீர்வதிக்க ஜெபிப்போம். சகோதரி மீனு அவர்களுக்கு இருக்கும் சிக்கன் குனியா குணமாகவும், அவர்களுக்கு பெலனுண்டாகவும் ஜெபிப்போம். குடும்ப பிரச்சனையினால் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் சகோதரர் ராஜ் கபூர் விடுவிக்கப்பட ஜெபிப்போம். கர்ப்பமாக இருக்கும் சகோதரி ரஜினி அவர்களுக்கு இருக்கும் பெலவீனம் நீங்க ஜெபிப்போம். மிகவும் பெலவீனப்பட்டிருக்கும் சகோதரர் தினேஷ் குணமாகி நல்ல பெலன் உண்டாக ஜெபிப்போம். எனது மகன் ஜோனமின் எதிர்கால படிப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**லூதியானா / சகோ. ஆகாஷ் தீப்சிங் குடும்பம்**

**PRAISE GOD** **சந்தித்த வீடுகள் : 32, வீட்டுக் கூட்டங்கள : 10, சந்தித்த வீடுகள் : 13, உபவாச கூடுகைகள் : 5, இரவு கூடுகைகள் : 1 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** சுலிலதா ராணி அவர்களுக்கு இருந்த இரத்த வாந்தி ஜெபத்தின் மூலம் குணமானதற்காக தேவனை துதிப்போம். அநேக மருந்துகள் எடுத்தும் குணமாகாத நிலையிலிருந்த ஹோலி விசுவாசத்தினாலும், ஜெபத்தினாலும் குணமானதற்காக தேவனை துதிப்போம். உஷா அவர்களின் இல்லத்தில் ஜெபத்தின் மூலம் சமாதானம் உண்டானதற்காக தேவனை துதிப்போம். அஜய் குமார் அவர்களுக்கு ஏற்ற துணை அமைய ஜெபித்தபோது தேவன் ஜெபத்தை கெட்டு ஏற்ற துணையை கொடுத்ததற்காக தேவனை துதிப்போம். ரேகா அவர்கள் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகவும், பல ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டதற்காகவும் தேவனை துதிப்போம்.

**PRAY** *without ceasing* காச நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் தேவ்மதி குணமாக ஜெபிப்போம். பிரவின் குமாரின் உடல் ஒரு பக்கம் செயல்படவில்லை, அவருக்காக ஜெபிப்போம். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் பிரேம் குமார் அவர்களுக்காக ஜெபிப்போம். சாலு அவர்களுக்கு சுகப்பிரசவத்தில் குழந்தை பிறக்கவும், தாயும் குழந்தையும் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம். அசுத்த ஆவியின் பிடியிலிருக்கும் ஆசு விடுவிக்கப்பட ஜெபிப்போம். அதிக இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். எனது பிள்ளைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். எனது ஊழியத்திற்காகவும், ஆவிக்குரிய வாழ்விற்காகவும், பொருளாதார தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### பாலியன்வாலி / சகோ. கோரா சிங் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 17, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 4, வீட்டுக் கூட்டங்கள் : 4, சந்தித்த கிராமங்கள் : 7, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : 1 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** ராஜ் குமார் அவர்களுக்கு வேலை கிடைத்ததற்காக தேவனை துதிப்போம். ரீஹட் அவர்களுக்கு திருமண ஏற்பாடு நடைபெறுவதற்காக தேவனை துதிப்போம். பல்ஜிந்தர் அவர்கள் நான்கு மாதங்களாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காக தேவனை துதிப்போம். முதுகு தண்டு வட பிரச்சனையினால் பாதிக்கப்பட்டிருந்த பர்காட் குணமானதற்காக தேவனை துதிப்போம்.

சபை விரிவடையவும், ஊழியம் விரிவடையவும் ஜெபிப்போம். பிரீத் கோர் அவர்களுக்கு பாதுகாப்பாகவும், ஆரோக் கியமாகவும் குழந்தை பிறக்க ஜெபிப்போம். புதிதாக அநேகர் ஆண்டவரை ஏற்றுக் கொள்ளவும், ஆராதனையில் கலந்து கொள்ளவும் ஜெபிப்போம். ஆலயம் கட்ட நிலம் வாங்க ஜெபிப்போம். பிந்தர் சிங் மற்றும் அவரது குடும்பத் திற்காக ஜெபிப்போம். எனது குடும்பத்திற்காகவும், ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### போஹா / சகோ.பூட்டா சிங் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 15, வீட்டுக் கூட்டங்கள் : 6, சந்தித்த கிராமங்கள் : 8, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : 1 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** சகோதரர் ஜெஸி சிங் அவர்கள் புதிய வீடு கட்ட கிருபை செய்த தேவனை துதிப்போம். சகோதரி ஜஸ்மீத் கோர் அவர்கள் 15 வருடங்கள் கழித்து நிலம் வாங்க கிருபை செய்த தேவனை துதிப்போம். சகோதரி மன்பிரீத் கோர் அவர்களது கணவர் அமரிக் சிங் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக தேவனை துதிப்போம். திருமணமாகி 13 வருடங்களாகியும் குழந்தை இல்லாமலிருந்த சகோதரி ரேவதி அவர்களுக்கு ஆண் குழந்தையை கொடுத்து ஆசீர்வதித்த தற்காக தேவனை துதிப்போம். சகோதரர்கள் மஜ்போத் சிங், லவ் சிங் அவர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை கிடைத்ததற்காக தேவனை துதிப்போம்.

அசுத்த ஆவியின் பிடியிலிருக்கும் சகோதரி ஜஸ்பிரீத் கோர் அவர்கள் விடுவிக்கப்பட ஜெபிப்போம். சகோதரி சோனி கோர் அவர்களுக்கு அரசு வேலை கிடைக்க ஜெபிப்போம். சகோதரி சராப்ஜீத் கோர் அவர்களுக்கு இருக்கும் உடல் சோர்வுகள் மற்றும் நோய்கள் குணமாகவும், பெலன் உண்டாகவும் ஜெபிப்போம். சகோதரர் ஜக்ரூப் சிங் அவர்களுக்கு காது சரியாக கேட்க ஜெபிப்போம். சகோதரர் அஜய்ப் சிங் அவர்களது உடலில் இருக்கும் பிரச்சனை சரியாக ஜெபிப்போம். சகோதரி ஜஸ்பிரீத் கோர் அவர்களுக்கு தேவன் குழந்தை பாக்கியத்தை கொடுத்து ஆசீர்வதிக்க ஜெபிப்போம். ஆகாஷ், ரவிகா இருவரது பள்ளி கட்டணம் கட்டி முடிக்கப்பட ஜெபிப்போம். பிள்ளைகளின் படிப்பு மற்றும் எதிர்காலத்திற்காக ஜெபிப்போம். ஆலயம் கட்ட நிலம் வாங்கப்பட ஜெபிப்போம்.

### சத்தன்வாஸ் / சகோ. லகிவீர் சிங் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 12, கொடுக்கப்பட்ட வேதாகமம் : 2, வீட்டுக் கூட்டங்கள் : 12, சந்தித்த கிராமங்கள் : 4 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருந்த நூர் குணமானதற்காக தேவனைத் துதிப்போம். சகோதரர் அரம்ஜீத் அவர்களுக்கு இருந்த மூட்டு வலியினால் வேலை செய்வதை நிறுத்தி விட்டார், ஜெபத்தின் மூலம் தேவன் அவரை குணமாக்கியதற்காக தேவனை துதிப்போம். தொடர்ந்து 15 நாட்களாக அதிக இரத்தப்போக்கினால் பாதிக்கப்பட்டிருந்த சகோதரி ஷிஷி ஜெபத்தின் மூலம் குணமானதற்காக தேவனைத் துதிப்போம். தேவேந்தர் அவர்களுக்கு இருந்த மூட்டு வலி குணமானதற்காக தேவனை துதிப்போம். வேலையில்லாமல் கஷ்டப்பட்டுவந்த சகோதரி சப்னாவிற்கு ஜெபத்தின் மூலம் வேலை கிடைத்ததற்காக தேவனை துதிப்போம்.

உடல் மற்றும் முகத்தில் அலர்ஜியினால் வெளியில் வரமுடியாமல் இருக்கும் சிறுமி அலிஷா குணமாக ஜெபிப் போம். நெஞ்சு வலியினால் மூச்சுவிட முடியாமல் கஷ்டப்படும் ரமேஷ் குமார் குணமாக ஜெபிப்போம். கடந்த மாதம் குளோரி அவர்களுக்கு சிறுநீரில் இரத்தம் வருவதால் வலியினால் அவதியுறும் அவர் விரைவில் குணமாக ஜெபிப் போம். அசுத்த ஆவியின் பிடியிலிருக்கும் சகோதரர் ஹரிஷ் குமார் அவரை தேவன் பாதுகாக்கவும், விடுவிக்கவும், சமா தானம் அருளவும், பெலத்தை தரவும் ஜெபிப்போம். எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். ஊழியத்திற்காகவும் ஊழிய வளர்ச்சிக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### பரேட்டா / சகோ.லாலீ சிங் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 11, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 4, வீட்டுக் கூட்டங்கள் : 9, சந்தித்த கிராமங்கள் : 10, உபவாச கூடுகைகள் : 3, இரவு கூடுகைகள் : 4 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** அலி ஷிர் கிராமத்தை சேர்ந்த புதிய குடும்பத்தை கொடுத்து ஆசீர்வதித்ததற்காக தேவனை துதிப்போம். சகோதரி வீர்பால் கோர் அவர்களுக்கு தேவன் ஆண் குழந்தையை கொடுத்து ஆசீர்வதித்த தேவனை துதிப்போம். அசுத்த ஆவியின் பிடியிலிருந்த சகோதரி ரமன்தீப் கோர் விடுவிக்கப்பட்டதற்காக தேவனை துதிப்போம். சகோதரர் குல்தீப் சிங் அவர்கள் இருசக்கர வாகனம் வாங்க கிருபை செய்த தேவனை துதிப்போம். சன்னிநாத் அவர்கள் வீடு கட்ட கிருபை செய்த தேவனை துதிப்போம்.

சகோதரர் போலா சிங் அவர்களுக்கு இருக்கும் மன அழுத்தம் மற்றும் பதற்றம் நீங்க ஜெபிப்போம். அசுத்த ஆவியின் பிடியிலிருக்கும் சகோதரிகள் சராப்ஜீத் கோர், அக்கோ கோர் இருவரும் விடுவிக்கப்பட ஜெபிப் போம். குடும்ப வாழ்வில் முரண்பாடுகளும் சச்சரவுகளும் இருப்பதால் கஷ்டப்படும் சகோதரி ஜோதி கோர் அவர்கள் வாழ்வில் சமாதானம், ஒற்றுமை, வாழ்வு சிறக்க ஜெபிப்போம். சகோதரர் ரிங்கு சிங் அவர்கள் வீடு கட்ட தேவைகள் சந்தி க்கப்பட ஜெபிப்போம். எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். ஊழியத்திற்காகவும், ஊழிய வளர்ச்சிக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### பாயல் / சகோ.ரவி குமார் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 25, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 6, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 10, கொடுக்கப்பட்ட வேதாகமம் : 1, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 13 கிராமங்கள், வீட்டுக் கூட்டங்கள் : 13, சந்தித்த கிராமங்கள் 35, உபவாச கூடுகைகள் : 7, இரவு கூடுகைகள் : 10 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** சகோதரர் ஆசு அவர்கள் ஜெயிலிலிருந்து விடுதலை பெற்றதற்காக தேவனை துதிப்போம். சகோதரி ஜெஸி அவர்களுக்கு இருந்த தொற்று குணமானதற்காக தேவனை துதிப்போம். சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருந்த சகோதரர் சோனி குணமானதற்காக தேவனை துதிப்போம். சகோதரர் ரோஹித் அவர்களுக்கு இருந்த இதய தொற்று குணமானதற்காக தேவனை துதிப்போம். அசுத்த ஆவியின் பிடியிலிருந்த சகோதரி சோனியா விடுவிக்கப்பட்டதற்காக தேவனை துதிப்போம்.

அசுத்த ஆவியின் பிடியிலிருக்கும் சகோதரர் தாரா சிங் அவர்கள் விடுவிக்கப்பட ஜெபிப்போம். சகோதரர் ரத்தன் அவர்களுக்கு பித்தப்பையிலிருக்கும் 12 மி.மீ கல் குணமாக ஜெபிப்போம். சகோதரி ரஜினி அவர்களுக்கு இருக்கும் ஒரு பக்க தலை வலி குணமாக ஜெபிப்போம். பல வருடங்களாக போதைப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் சகோதரர் ராமன் விடுவிக்கப்பட ஜெபிப்போம். சகோதரர் தில் பிரீத் அவர்களுக்கு சிறுநீர் மற்றும் மலம் கழிக்கும் உணர்வு இல்லாத நிலை மாற ஜெபிப்போம். எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## கர்நாடகா



### ஷிகான் / சகோ.தன்யா சுந்தர் நாயக் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 35, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 35, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 60, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 30, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 1, வீட்டுக் கூட்டங்கள் : 4, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : 4 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** ஆராதனை நடைபெற தேவன் ஒரு இடத்தை கொடுத்ததற்காக அவரை துதிப்போம். ஆறு மாத ஓய்விற்கு பிறகு அர்ஜீன் குணமடைந்து ஆராதனையில் கலந்து கொள்வதற்காக தேவனை துதிப்போம். கணவர் மற்றும் மாமியாரால் ஆராதனையில் கலந்து கொள்ள முடியாமல் இருந்த சந்திரகலா அவர்களை அவரது வீட்டில் சென்று சந்தித்தபோது அவரை ஆராதனைக்கு அனுப்புவதாக அவரது கணவர், மாமியார் கூறியிருந்த நிலையில், தற்போது ஆராதனையில் கலந்து கொள்வதற்காக தேவனை துதிப்போம். பக்கவாதத்தினால் பாதி க்கப்பட்டுள்ள சரோஜாமா அவர்களுக்கு ஜெபத்தின் மூலம் அவரது இடது கை செயல்படுவதற்காகவும், சிறிது பேசவும் கிருபை செய்த தேவனை துதிப்போம். சஞ்சனா அவர்களுக்கு அநேக வருடங்களுக்கு பிறகு ஏற்ற துணை கிடைத்ததற்காக தேவனை துதிப்போம்.

திருமணமாகி 8 வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லாமலிருக்கும் சந்திரகலா தனது கணவர் மற்றும் மாமிய-ரால் பலவித இன்னல்களை சந்தித்து வருகிறார், தேவன் அவருக்கு குழந்தை பாக்கியத்தை கட்டளையிட்டு அவரது நிந்தையை நீக்கும்படி ஜெபிப்போம். ஆலயம் கட்ட நிலம் வாங்கப்பட ஜெபிப்போம். விசுவாசிகளிடம் ஒற்றுமை வளரவும், ஆராதனையில் கலந்து கொள்பவர்கள் அதிகமாகவும் ஜெபிப்போம். புதிய விசுவாசிகள் ஆண்டவருக்குள் பெலப்படவும், புதிய விசுவாசியான மஞ்சு விசுவாசத்தில் பெலப்படவும், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம். பின்மாற்றத்திற்கு சென்ற விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்தில் பெலப்பட்டு, ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம். புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்படுபவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

### ரூண்ட்ஷி / சகோ.பசவராஜ் ராத்தோட் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 30, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 35, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 70, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 28, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 1, வீட்டுக் கூட்டங்கள் : 5, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : 4 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** அதிக காய்ச்சல், வயிற்றுபோக்கு மற்றும் வாந்தியினால் பாதிக்கப்பட்டிருந்த ரேணுகா மற்றும் சின்னம்மா குணமானதற்காக தேவனை துதிப்போம். புதிதாக 5 குடும்பங்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டதற் காக தேவனை துதிப்போம். ஆலய கட்டுமானப்பணியில் விசுவாசிகள் பங்கு பெற்று உதவுவதற்காக தேவனை துதிப்போம்.

நாகம்மா அவர்களின் பெலவீனம் நீங்கி பெலனடைய ஜெபிப்போம். தைராடினால் பாதிக்கப்பட்டுள்ள 14 வயது பூமிகா குணமாக ஜெபிப்போம். கவிகா அவர்களுக்கு வயிற்றில் நடைபெற்ற அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்றது, மேலும் மருத்துவர் வயிற்றில் கொப்புளங்கள் இருப்பதாக கூறியிருக்கிறார், அவர் குணமடைய ஜெபிப்போம். புதிய குடும்பங்கள், புதிய கிராமங்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம். காலில் அழுகல் நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் எனது தாயார் குணமாக ஜெபிப்போம். ஆலய கட்டுமானப்பணிகள் நிலைக்கதவு மட்டம் வரை வந்துள்ளது, மேலும் உள்ள தரைத்தளப்பணிகள் அனைத்தும் நிறைவடைய ஜெபிப்போம்.

### குஷ்டிகி / சகோ.திபேஷ் நாயக் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 40, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 35, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 70, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 30, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 1, வீட்டுக் கூட்டங்கள் : 4, சந்தித்த கிராமங்கள் : 2, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : 4 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** பத்து வயது பிரதிக்ஷா கங்காவதியில் உள்ள பெண்கள் விடுதியில் தங்கியிருந்தாள், ஆனால் யாரோ அவளை பள்ளியிலிருந்து கடத்திச் சென்று விட்டனர், இதனால் குடும்பத்தினரும், பள்ளி நிர்வாகத்தினரும் மிகுந்த பதற்றத்தில் இருந்தனர், காவல் நிலையத்தில் புகார் அளிப்பதற்கு முன் விசுவாசிகள் அனைவரும் ஜெபித்தார்கள், தேவன் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டார், மைசூரிலிருந்து ஒருவர் தொலைபேசியில் அழைத்து, உங்கள் மகள் மைசூரில் இருக்கிறாள், வந்து அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினார், பெற்றோர் அழைத்து வந்து விசாரித்த பிறகு, கடத்தி சென்றவர்களுக்கு குழந்தை இல்லை. அதனால் தன்னைக் காரில் கடத்திச் சென்றதாகவும் சிறுமி கூறினாள், தேவன் ஜெபத்தைக் கேட்டு பிரதிக்ஷாவை பாதுகாத்ததற்காக அவரை துதிப்போம்.

குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் ஓனெஸ் மது அருந்த வேண்டாமென கூறியும் கேட்காததால், கல்லீரல் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், அவர் இன்னும் சில நாட்கள் மட்டுமே உயிர் வாழ்வார் என மருத்துவர் கூறியிருக்கிறார், அவருக்காக ஜெபிப்போம். பின்மாற்றத்திற்குள் சென்றிருக்கும் அக்காமா மீண்டும் விசுவாசத்தில் பெலப்பட ஜெபிப்போம். கிராம மக்களால் அச்சுறுத்தப்படும் ராஜம்மா, ஜமாம்மா இருவரையும் தேவன் பாதுகாக்கவும், விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம். புதிதாக அநேகர் ஆண்டவரை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

### இல்கால் / சகோ.உமேஷ் நாயக் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 50, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 30, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 80, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 22, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 1, வீட்டுக் கூட்டங்கள் : 4, சந்தித்த கிராமங்கள் : 3, உபவாச கூடுகைகள் : 5, இரவு கூடுகைகள் : 3 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** டைபாய்டு காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த யூவான் குணமானதற்காக தேவனை துதிப்போம். அசுத்த ஆவியின் பிடியிலிருந்த லெட்சுமி விடுவிக்கப்பட்டதற்காக தேவனை துதிப்பே-ாம். முட்டகல், ஹட்டகல்லி தண்டா, நாக்லாபூர் ஆகிய மூன்று புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனை துதிப்போம். இரவு கூட்டத்தில் 10 பேர் கலந்து கொண்டதற்காக தேவனை துதிப்போம். வீட்டுக் கூட்டங்கள் மூன்றிலும் விசுவாசிகள் அநேகர் கலந்து கொண்டதற்காக தேவனை துதிப்போம்.

எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டுள்ள ஷர்தாவிற்காக ஜெபிப்போம். திரிபதி அவர்களுக்கு இருக்கும் கால் வீக்கம் குணமாக ஜெபிப்போம். அனில் அவர்களின் மூக்கிலிருந்து இரத்தம் வருவது குணமாக ஜெபிப்போம். சுப்பிரியா அவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்க ஜெபிப்போம். கங்கமா அவர்கள் தைராய்டிலிருந்து குணமாகவும், குழந்தை பாக்கியம் கிடைக்கவும் ஜெபிப்போம். உளிகமா அவர்கள் கடன் பிரச்சனையிலிருந்து விடுபட ஜெபிப்போம். புதிய கிராமங்கள் ஆண்டவரை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம். எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### பசாவானா பகேவாடி / சகோ.பாபு நாயக் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 50, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 40, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 60, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 25, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 2, வீட்டுக் கூட்டங்கள் : 4, சந்தித்த கிராமங்கள் : 1, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : 4 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** வாலிபர் கூடுகைக்கு 15 பேர் கலந்து கொண்டதற்காக தேவனை துதிப்போம். மன்னூர் தண்டாவில் சுவிசேஷம் அறிவிக்கும்போது சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டதற்காக தேவனை துதிப்போம். மின்னல் தாக்குதலிலிருந்து சங்கர் பாதுகாக்கப்பட்டதற்காக தேவனை துதிப்போம். சிமியால் தண்டா பகுதியில் நடைபெற்ற வீட்டுக் கூட்டத்தில் 5 புதிய நபர்கள் கலந்து கொண்டதற்காக தேவனை துதிப்போம். அம்மை நோயாலும், காய்ச்சலாலும் பாதிக்கப்பட்டிருந்த இவான் குணமானதற்காக தேவனை துதிப்போம்.

எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டிருக்கும் சோமு, பேபி பாய் இருவருக்காகவும் ஜெபிப்போம். இரத்த அழுத்தம் மற்றும் சத்துருவின் கிரியையிலிருந்து சனிதா விடுவிக்கப்பட ஜெபிப்போம். மாதவிடாய் சுழற்சியில் கடுமையான வலியினால் பாதிக்கப்பட்டும் வீணா குணமாக ஜெபிப்போம். பின்மாற்றத்திற்கு சென்ற விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்தில் பெலப்படவும், ஆராதனையில் கலந்து கொள்ளவும் ஜெபிப்போம். விசுவாசிகளிடையே ஒற்றுமையும், ஐக்கியமும் வளர ஜெபிப்போம். ஆராதனைக்கு புதிதாக வரும் அனைவரும் விசுவாசத்தில் பெலப்பட ஜெபிப்போம். எனது குடும்பத்திற்காகவும், பிள்ளைகளின் படிப்பு மற்றும் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

குட்டிரிமோதி (கொப்பால்) / சகோ.பிரசாத் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 50, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 20, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 50, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 20, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 1, வீட்டுக் கூட்டங்கள் : 4, சந்தித்த கிராமங்கள் : 4, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : 4 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** சகோதரி சங்கீதா அவர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை அமைந்ததற்காக தேவனை துதிப்போம். உலிகமா அவர்களுக்கு சிறுநீரக கல் நீக்க அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்றதற்காக தேவனை துதிப்போம். முதுகு வலி மற்றும் மூட்டு வலியினால் பாதிக்கப்பட்டிருந்த பக்கீரபா ஜெபத்தின் மூலம் குணமானதற்காக தேவனை துதிப்போம். கல்லீரலில் துளையிருப்பதினால் பாதிக்கப்பட்டிருந்த ஏலப்பா குணமானதற்காக தேவனை துதிப்போம். பூஜாவின் குடும்பத்தில் இருக்கும் பிரச்சனைகள் நீங்கியதற்காக தேவனை துதிப்போம்.

நரம்பு பிரச்சனையினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஜம்பமா குணமாக ஜெபிப்போம். புதிதாக ஆண்டவரை ஏற்றுக் கொண்டுள்ள வெண்டேஷ்-ஐ அவரது குடும்பத்தினர் எதிர்கின்றனர், அவரது குடும்பத்தினர் ஆண்டவரை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம். தேவமா குழந்தைகள் நன்றாக படிக்க ஜெபிப்போம். கிராம ஊழியம் வளர ஜெபிப்போம். புதிதாக அநேகர் ஆண்டவரை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம். விசுவாசிகள் ஒற்றுமையாக விசுவாசத்தில் வளர ஜெபிப்போம். எனக்காகவும், எனது பிள்ளைகளின் படிப்பு மற்றும் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பெல்காம் / சகோ.மஞ்சுநாத் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 40, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 12, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 50, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 12, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 1, வீட்டுக் கூட்டங்கள் : 4, சந்தித்த கிராமங்கள் : 4, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : 4 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** ஆஷா ஷாவான் அவர்கள் புதிதாக சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டதற்காக தேவனை துதிப்போம். ஷாபூர் கிராமத்தில் சுவிசேஷம் அறிவித்தபோது, ராம் சந்திரா குடும்பம் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டதற்காக தேவனை துதிப்போம். வடகாவ் கிராமத்தில் வெங்கடேஷ் குடும்பம் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டதற்காக தேவனை துதிப்போம். அஷாம் நகரை சேர்ந்த மரியம்மா சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டதற்காக தேவனை துதிப்போம். தீர்த்தகுண்டே கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனை துதிப்போம். தேவன் என்னை எல்லா விதமான விபத்துகளிலிருந்தும், தீய மனிதர்களிடமிருந்தும் பாதுகாத்ததற்காக அவரை துதிப்போம்.

ஆஷா ஷாவன் அவர்களுக்கு நடைபெறவிருக்கும் இதய அறுவை சிகிச்சை சரியான முறையில் நடைபெற ஜெபிப்போம். ராம் சந்திரா அவர்களின் உடல் நல பிரச்சனைகள் நீங்கி நல்ல ஆரோக்கியம் உண்டாக ஜெபிப்போம். வெங்கடேஷ் அவர்கள் கடனிலிருந்து விடுபட ஜெபிப்போம். முனிசிபலில் வேலைசெய்யும் மரியம்மா வேலை நிரந்தரமாக ஜெபிப்போம். புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க திறந்த வாசல் உண்டாக ஜெபிப்போம். நாங்கள் சுவிசேஷம் அறிவித்த அனைவரும் ஒரு இடத்தில் கூட தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம். எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

## அஸ்ஸாம்



ஜோனாய் / சகோ.பிகாஷ் பெகு குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 10, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 17, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 2, வீட்டுக் கூட்டங்கள் : 1, சந்தித்த கிராமங்கள் : 2 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் தேவனின் கரம் எங்களோடிருப்பதால் அவரை துதிப்போம். எங்களை தமது ஊழியத்திற்காக தெரிந்தெடுத்த தேவனை துதிப்போம்.

கேன்சரால் பாதிக்கப்பட்டிருக்கும் நரேன் டோலி அவர்களுக்காக ஜெபிப்போம். அஸ்ஸாமிலுள்ள அனைவரும் ஆண்டவரை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம். விசுவாசிகள் அனைவரும் விசுவாசத்தில் பெலப்பட ஜெபிப்போம். பள்ளியின் நிலப்பணிகள், அலுவலக பணிகள் அனைத்தும் நேர்த்தியாக முடிவடைய ஜெபிப்போம்.

ஸ்ரீபணி, லம்ஜன் பிஹுயா / சகோ.கோபால் மிலி குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 20, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 40, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 4, சந்தித்த கிராமங்கள் : 2, உபவாச கூடுகைகள் : 2 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** எனது குடும்பத்தை இம்மட்டும் பாதுகாத்து வழிநடத்திய தேவனை துதிப்போம். எங்களை எங்களது அனைத்து சூழ்நிலைகளிலும் வழிநடத்திய தேவனை துதிப்போம்.

சக்கரை நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் லீலாகண்டா மிலி குணமாக ஜெபிப்போம். விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் பெலப்பட ஜெபிப்போம். ஊழியம் இன்னும் வளர்ந்து பெருக ஜெபிப்போம். எங்களது அனைத்து தேவைகளையும் சந்திக்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

மஜோலி / சகோ. ராஜேஷ் டூட்டா குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 20, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 57, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 9, ஞானஸ்நானம் பெற்ற வர்கள் : 4, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 3, வீட்டுக் கூட்டங்கள் : 1, சந்தித்த கிராமங்கள் : 4 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** என்னையும் எனது குடும்பத்தையும் பாதுகாத்து வழிநடத்திய தேவனை துதிப்போம்.

எனது ஊழியத்தை தேவன் ஆசீர்வதிக்கவும், ஒவ்வொரு நொடியையும் தேவனுக்கு பிரயோஜனமாய் பயன்படுத் தவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். ராஜன் பெகுவின் உடல் நல பிரச்சனை சரியாகவும், நன்கு சாப்பிடவும் ஜெபிப் போம்.

## ஒரிசா



பலடியாபந்தா, தேன்கானல் / சகோ. சாமுவேல் பெஹரா குடும்பம்

**ஆராதனை நடைபெறும் இடங்கள் : 4 இதற்காக தேவனை துதிப்போம்.** கோட்மாரா பகுதியில் சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனை துதிப்போம். விசுவாசி ஒருவரின் ம கள் திருமணத்தை ரிஜிஸ்டர் செய்ய கிருபை செய்த தேவனை துதிப்போம். காடிபீரி கூடுகையில் அனைத்து விசுவாசிகளும் கலந்து கொண்டதற்காக தேவனை துதிப்போம்.

குலனா நாயக், மதாப் நாயக் குடும்பத்திற்காக ஜெபிப்போம். பக்கவாதத்தினால் பாதி க்கப்பட்டிருக்கும் ஹேமா நாயக், ராஜேந்திர நாயக் இருவரின் ஆரோக்கியத்திற்காக ஜெபிப்போம். மார்பு கேன்சரால் பாதிக்கப்பட்டிருக்கும் எனது தாயார் பங்கஜினி பெஹரா அவர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். எனது பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்காகவும், நன்கு படிக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். எனது மகள் ஜெஸிகா படிப்பின் கட்டணம் முழுமையாக கட்டி முடிக்க தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள். தேன்கானல், அங்குள் மாவட்டங்களில் வாலிபர் கூடுகை நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம். ஒரிசா மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

தாளவாடி / சகோ. சி.ஜே.பேட்ரிக் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 25, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 50, வீட்டுக் கூட்டங்கள் : 2, சந்தித்த கிராமங்கள் : 5, உபவாச கூடுகைகள் : 4 இவற்றிற் காக தேவனை துதிப்போம்.** தாளவாடி, கரளவாடி, தொட்டபுறா, முதியனூர், ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளில் சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனை துதிப்போம்.

சந்திக்கப்படாத கிராமங்கள் சந்திக்கப்பட ஜெபிப்போம். விசுவாசிகள் அனைவரும் விசுவாசத்தில் பெலப்படவும், ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம். எனக்கு ஊழியம் செய்ய தேவையான ஆரோக்கியம் உண்டாக ஜெபித்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளின் படிப்பிற்கு தேவ ஞானம் கிடைக்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.



எலந்தூர் / சகோ.எஸ்தர் (அபிநயா)

**எலந்தூர் பகுதியில் சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனை துதிப்போம்.**

எலந்தூரில் சந்திக்கப்படாத இடங்கள் சந்திக்கப்படவும், மக்களின் கடின இருதயம் மாறவும் ஜெபிப்போம். வாலிபர்களின் இருதயத்தை தேவன் மாற்ற ஜெபிப்போம். விரைவில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

## ஜெபிக்கலாம் வாங்க...

இந்தியாவில் 4 நிமிடத்திற்கு 30 வயதிற்குட்பட்ட ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார். தற்கொலை ஆவி தேசத்தை விட்டு வெளியேற ஜெபிப்போம்.





இந்தியாவில் சுமார் 10 லட்சம் பாலியல் தொழிலாளர்கள் இருப்பதாக இந்திய எய்ட்ஸ் திட்ட அமைப்பின் திட்ட அலுவலர் கூறுகிறார். பாலியல் தொழிலாளர்கள் தங்கள் தொழிலை விட்டு பரிசுத்தமாக வாழ ஜெபிப்போம்.

# ஜம்மு & காஷ்மீர்



### ஜம்மு / சகோ. ஸ்டீபன் கில் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 30, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 4, வீட்டுக் கூட்டங்கள் : 20, சந்தித்த கிராமங்கள் : 10, உபவாச கூடுகைகள் : 2, திறந்த வெளி கூடுகைகள் : 2 நாட்கள். இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** டன்சல், மண்டல், பிங்கி வீடு, ரீட்டா வீடு, ரஞ்ஜிதா வீடு ஆகிய பகுதிகளில் கூடுகை நடைபெற கிருபை செய்த தேவனை துதிப்போம். நாக்ரோட்டா, கிறிஸ்டியன் காலனி ஆகிய இரண்டு பகுதிகளை சந்திக்க கிருபை செய்த தேவனை துதிப்போம்.

ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம். பல வித்தியாசமான பகுதிகளில் ஊழியம் வளர ஜெபிப்போம். ஆராதனை நடைபெறும் இடத்திற்கான வாடகை மற்றும் வீட்டு வாடகை தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். எனது ஊழியத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். அநேக பகுதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க ஜெபிப்போம். ஜம்மு & காஷ்மீர் மாநில மக்கள் இரட்சிக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### ஆர்.எஸ்.புரா / சகோ.சுனில் குமார் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 2, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 2, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 12, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 1, ஞானஸ்நானம் பெற்றவர்கள் : 1, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 1, வீட்டுக் கூட்டங்கள் : ஆம், சந்தித்த கிராமங்கள் : 1, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : ஆம். இவற்றிற்காக தேவனை துதிப்போம்** காசநோயால் பாதிக்கப்பட்டிருந்த ராம் பைரி குணமானதற்காக தேவனை துதிப்போம். 4 வருடங்களாக அசுத்த ஆவியின் பிடியிலிருந்த கண்டமா தேவி விடுவிக்கப்பட்டதற்காகவும், ஆராதனையில் கலந்து கொண்டதற்காகவும் தேவனை துதிப்போம்.

பண்டி கீல் அவர்களுக்கு இருக்கும் பண பிரச்சனை சரியாக ஜெபிப்போம். ராகுல் குமார் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம். விஜய் குமார் அவர்களுக்கு இருக்கும் இதய நோய் குணமாக ஜெபிப்போம். எனது ஊழியத்திற்காகவும், குடும்பத்திற்காகவும், விசுவாசிகளுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### நியூ பிளாட் ஜம்மு / சகோ. ரவி மட்டு குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 8, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 18, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 9, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 6, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 5, வீட்டுக் கூட்டங்கள் : 19, சந்தித்த கிராமங்கள் : 7, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : 1 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** புதிய குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக் கொண்டதற்காக தேவனை துதிப்போம். தேவன் எங்களை ஆசீர்வதித்ததற்காக அவரை துதிப்போம். எனக்கு புதிய திட்டங்களை தந்த தேவனை துதிப்போம். தேவன் என்னை தமது ஊழியத்திற்காக தேர்ந்தெடுத்ததற்காக அவரை துதிப்போம்.

ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம். அறிவிக்கப்படாத இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபிப்போம். எனது ஊழியம் வளர்ந்து பெருக ஜெபித்துக் கொள்ளுங்கள். ஒரு புதிய தொடக்கம் எனது ஊழியத்தில் உண்டாக ஜெபித்துக் கொள்ளுங்கள். எனது குடும்பத்தினர் மற்றும் விசுவாசிகள் அனைவரின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### உதம்பூர் / சகோ. ஸ்டீபன் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 2, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 3, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 2, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 3, வீட்டுக் கூட்டங்கள் : தினமும், சந்தித்த கிராமங்கள் : 2, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : தினமும். இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** எனது குடும்பத்தின் அனைத்து தேவைகளையும் சந்தித்த தேவனை துதிப்போம். ஏஞ்சல் அவர்களின் அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற உதவியதற்காகவும், அவர்களின் அனைத்து பிரச்சனைகளையும் மாற்றிய தேவனை துதிப்போம். புதிய குடும்பத்தை கொடுத்து ஆசீர்வதித்த தேவனை துதிப்போம்.

வரவிருக்கும் அனைத்து ஆராதனைகளையும் தேவன் சிறப்பாக நடத்தித்தர ஜெபிப்போம். ஊழியத்தில் இன்னும் தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம். அசுத்த ஆவியின் பிடியிலிருக்கும் மோகன்லால் குடும்பம் விடுவிக்கப்படவும், பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.



## ஜெபிக்கலாம் வாங்க...

இந்தியாவில் வாலிபர்கள் ஒரு நாளைக்கு 80 லட்சம் குறுஞ்செய்திகளை அனுப்புகின்றனர்.
ஒரு வினாடிக்கு 92 ஆயிரம் குறுஞ்செய்திகளை அனுப்புகின்றனர்.
வாலிபர்கள் தங்கள் கைபேசிகளை பரிசுத்தமாக பயன்படுத்த ஜெபிப்போம்.



ஸ்ரீநகர் / சகோ.வினோத் விக்டர் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 3, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 15, கொடுக்கப்பட்ட துண்டு பிரதிகள் : 10, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 1, வீட்டுக் கூட்டங்கள் : 3, சந்தித்த கிராமங்கள் : 2, உபவாச கூடுகைகள் : 1 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** ராஜ்பக், ஹுமமா, அனந்நக் ஆகிய பகுதிகளில் கூடுகை நடைபெற கிருபை செய்த தேவனை துதிப்போம். சிவ்புரா பகுதியில் உபவாச கூடுகைகள் நடைபெற கிருபை செய்த தேவனை துதிப்போம்.

ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம். எனது குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். ராஜ்பக் பகுதியில் புதிதாக ஊழியம் ஆரம்பிக்க ஜெபிப்போம். எனது உடல் நலத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பட்டோட் / சகோ. ஜேம்ஸ் மசிஹ் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 13, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 4, வீட்டுக் கூட்டங்கள் : 8, சந்தித்த கிராமங்கள் : 3, உபவாச கூடுகைகள் : 20 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** சகோதரர் பிரபு அவர்கள் விழுந்ததினால் காயம் ஏற்பட்டு, பல நாட்களாக படுக்கையிலிருந்து கஷ்டப்பட்ட அவர் ஜெபத்தின் மூலம் குணமானதற்காக தேவனை துதிப்போம். புதிதாக மூன்று பிள்ளைகள் மற்றும் அவர்களது தாயார் இருக்கும் குடும்பம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதற்காக தேவனை துதிப்போம்.

ஆலயம் கட்ட நிலம் வாங்கவும், ஆலயம் கட்டப்படவும் ஜெபிப்போம். ஆராதனையில் கலந்து கொள்ளும் குடும்பங்களில் பலர் பிரச்சனையினாலும், சில கணவன் மனைவிக்கு இடையில் பிரச்சனையினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர், அவர்கள் பிரச்சனைகள் சரியாகவும், குடும்பத்தில் சமாதானம் நிலவவும் ஜெபிப்போம். காது கேட்காததால் கஷ்டப்படும் 15 வயதான ரோஹனுக்கு மருத்துவர் அறுவை சிகிச்சை செய்ய அறிவுறுத்தியிருக்கிறார், அவன் குணமாக ஜெபிப்போம். புதிதாக அநேகர் ஆண்டவரை ஏற்றுக் கொள்ளவும், சுவிசேஷம் அனைத்து ஜாதி மக்களுக்கும் சென்றடைய ஜெபிப்போம்.

ரீடா / சகோ.சாமியல் குடும்பம்

**சந்தித்த வீடுகள் : 5, சந்தித்த கிராமங்கள் : 3, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 1 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** கடந்த மாதம் அனைத்து தேவைகளையும் சந்தித்ததற்காகவும், விசுவாசத்தில் எங்களை நிலைத்திருக்க செய்ததற்காகவும் தேவனை துதிப்போம். எனது சகோதரன் மகள் ஏஞ்சலின் அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்றதற்காக தேவனை துதிப்போம். எனது மகன் அமன் வேதாகம கல்லூரியில் சேர கிருபை செய்த தேவனை துதிப்போம்.

தேவன் எங்கள் குடும்பத்தை ஊழியத்தில் இன்னும் வல்லமையாக பயன்படுத்த ஜெபித்துக் கொள்ளுங்கள். எனது மகன் படிப்பின் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள். புதிய விசுவாசிகளான பிஸ்சன் லால் மற்றும் அவரது குடும்பத்தினர் ஆண்டவரை ஏற்றுக் கொண்டுள்ளனர், அவர்களது குடும்பத்திலிருக்கும் அசுத்த ஆவியின் கிரியைகளிலிருந்து விடுவிக்கப்படவும், குடும்பத்தை பெலப்படுத்தவும் ஜெபிப்போம்.

## ஜார்கண்ட்

பாண்டு, பாரு (அமேசிங் கிரேஸ் ஹாப்பி ஹோம்) / சகோ.சைமன் மால்தோ குடும்பம்



கடந்த மாதம் விடுதி பிள்ளைகளை பலவித நோய்களில் இருந்து பாதுகாத்த தேவனை துதிப்போம். பணியாளர் அறை, குளியலறை மற்றும் கழிப்பறை கட்டுமானப்பணி நிறைவடைந்ததற்காக தேவனை துதிப்போம். சிறுமிகளின் அறை பாதிஅளவு கட்டி முடிக்கப்பட்டதற்காக தேவனை துதிப்போம். கட்டுமானப்பணிகளுக்கு தேவையான சிமெண்ட், இரும்பு கம்பி, மணல் போன்ற அனைத்து பொருட்களும் கிடைக்க கிருபை செய்த தேவனை துதிப்போம். ஒரு புதிய பணியாளர் கிடைத்ததற்காக தேவனை துதிப்போம்.

பெண் பிள்ளைகளின் அறை கட்டுமானப்பணிக்கான சிமெண்ட், இரும்பு கம்பிகள், மணல் இன்னும் உள்ள அனைத்து தேவைகளும் சந்திக்கப்பட ஜெபிப்போம். சிற்றாலய கட்டுமானப்பணி சிறப்பாக எவ்வித தொய்வுமின்றி நடக்க ஜெபிப்போம். விடுதி பிள்ளைகள் பள்ளிக்குச் செல்ல வேன் கிடைக்க ஜெபிப்போம். இருசக்கர வாகனம் விரைவில் கிடைக்க ஜெபிப்போம். புதிய பள்ளி, விடுதி கட்டப்பட ஜெபிப்போம். எனது மனைவி பிரேமி மால்தோ உடல்நலத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். ஹென்றி அவர்களின் உடல்நலத்திற்காக ஜெபிப்போம். புதிய சுவிசேஷகர்களான ஆபிரகாம் மால்தோ, திலிப் மால்தோ, மனுவேல் மால்தோ ஆகியோருக்கு ஆதரவாளர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## பூண்டா (விடுதி) / சகோ.சஞ்சய் மால்தோ குடும்பம்

**PRAISE** கடந்த மூன்று மாதங்களாக மூளை காய்ச்சலால் அவதியுற்று வந்த எனது மகள் பிரேமி மால்தோ குணமான தற்காக தேவனை துதிப்போம். விடுதி பிள்ளைகளில் அநேகர் பெலவீனப்பட்டிருந்த போதும் தேவன் அவர்களை பாதுகாத்ததற்காக தேவனை துதிப்போம். கோடை காலத்தில் தண்ணீர் பிரச்சனையில்லாமல் பாதுகாத்த தேவனை துதிப்போம். கடந்த மாதம் பிள்ளைகளின் உணவு தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட்டதற்காக தேவனை துதிப்போம்.

**PRAY** *without ceasing* மணிதா மால்தோ அவர்கள் வித்தியாசமான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார், அவர் குணமாக ஜெபிப்போம். பாண்டு பள்ளிக்கு போர்வெல் போடப்பட ஜெபிப்போம். அனைத்து பிள்ளைகளுக்கும் ஆதரவாளர் கிடைக்க ஜெபிப் போம். மளிகை ஜாமான் தேவைகள் ஒவ்வொரு மாதமும் சந்திக்கப்பட ஜெபிப்போம். கோடை விடுமுறை முடிந்து அனைத்து விடுதி பிள்ளைகளும் பள்ளிக்கு செல்கின்றனர், அவர்களின் படிப்பு, ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம். புதிய பள்ளி, விடுதி, பணியாளர் அறை கட்ட தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

## டின்பஹாா் / சகோ.ரூபன் மால்தோ குடும்பம்

**PRAISE** **சந்தித்த வீடுகள் : 20, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 216, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 300, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 5, வீட்டுக் கூட்டங்கள் : 10, சந்தித்த கிராமங்கள் : 6, உபவாச கூடுகைகள் : 5, இரவு கூடுகைகள் : 3 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** மூளை காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த மரியம் மால்தோ குணமானதற்காக தேவனை துதிப்போம். பெஞ்சமின் குடும்பம் ஆலயம் கட்ட நிலம் வழங்க முன்வந்ததற்காக தேவனை துதிப்போம். பெஞ்சமின் மால்தோ அவர்களின் மகள் திருமணம் நல்ல முறையில் நடைபெற கிருபை செய்ததற்காக தேவனை துதிப்போம்.

**PRAY** *without ceasing* பத்பன்கா கிராமத்தில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம். 5 கிராமங்களில் நடைபெறும் ஞாயிறு ஆராதனையில் அனைத்து வாலிபர்களும் கலந்து கொள்ள ஜெபிப்போம். பிள்ளைகளின் கல்வி மற்றும் ஆரோக்கியத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். 3 புதிய கிராமங்கள் ஆண்டவரை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம். எனது குடும்பத்தில் உள்ள அனைவரையும் தேவன் பாதுகாக்கவும், ஆரோக்கியமாக நாங்கள் இருக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## பர்ஹெய்ட் / சகோ.சைலஸ் மால்தோ குடும்பம்

**PRAISE** **சந்தித்த வீடுகள் : 41, ஆராதனையில் கலந்து கொண்டவர்கள் : 342, ஆண்டவரை ஏற்றுக் கொண்டவர்கள் : 324, ஆராதனை நடைபெறும் இடங்கள் : 5, சந்தித்த கிராமங்கள் : 5, உபவாச கூடுகைகள் : 4, இரவு கூடுகைகள் : 5 இவற்றிற்காக தேவனை துதிப்போம்.** சுசிலா மால்தோ அவர்களுக்கு கண் அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற கிருபை செய்த தேவனை துதிப்போம். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த சாண்டு மால்தோ குணமானதற்காக தேவனை துதிப்போம். வாயு தொல்லையால் பாதிக்கப்பட்டிருந்த ரோணி மால்தோ குணமானதற்காக தேவனை துதிப்போம். விபத்தினால் கால் எலும்பு முறிவு ஏற்பட்டதால் பாதிக்கப்பட்டிருந்த சஞ்சய் மால்தோ குணமானதற்காக தேவனை துதிப்போம்

**PRAY** *without ceasing* 5 கிராமங்களில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம். 5 கிராமங்களில் சி.டி.சி பள்ளி தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். மஸ்கிபூ கிராமத்தை சேர்ந்த மக்களுக்கு இருக்கும் நில பிரச்சனைகள் சரியாக ஜெபிப்போம். ஞாயிறு ஆராதனையில் அனைத்து வாலிபர்களும் தொடர்ந்து கலந்து கொள்ள ஜெபிப்போம். ஆண்டவரை அறியாத 5 புதிய கிராமத்தினர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம். ஆண்டவரை ஏற்றுக் கொண்ட புதிய மூன்று குடும்பத்தினர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.



# காத்திருத்தல்

**நோவா :** பேழையிலிருந்து வெளியே வர தேவனுடைய நேரத்திற்காக காத்திருந்தான். (ஆதி 8:10,12)

**மோசே :** சீனாய் மலையில் தேவ சமூகத்தில் காத்திருந்தான். (யாத் 24:12)

**ஏசாயா :** தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு இரங்கும்படி காத்திருந்தான். (ஏசாயா 8:17)

**ஆபகூக் :** குறித்த காலத்து தரிசனம் நிறைவேறும்படி காத்திருந்தான். (ஆபகூக் 2:3)

**ஆபிரகாம் :** தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருந்தான்.

**தாவீது :** அபிஷேகம் செய்யப்பட்ட பின்பும் ராஜாவாக அரியணையில் அமர பல ஆண்டுகள் காத்திருந்தார்.

**சிமியோன் :** மேசியாவை காணும் வரை காத்திருந்தார்.

**எலியா :** சோதனையிலும் தேவனை நம்பி காத்திருந்தார்.

**“காத்திருப்பது பெலவீனம் அல்ல; அது விசுவாசத்தின் பலம்”.**

# மிஷன் இந்தியா இயக்கத்தின்
# ஊழியர் அறிமுகம்



## சஞ்சய் மால்தோ & சாந்தி

பிள்ளைகள் : **பிரேமி மால்தோ**

பணித்தளம்/**பூண்டா (அமேசிங் கிரேஸ் ஹேப்பி ஹோம்)**

மாநிலம் : **ஜார்கண்ட்**

### ஜெபக்குறிப்புகள்

- விடுதி பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்காக ஜெபியுங்கள்.
- விடுதி பிள்ளைகளின் படிப்பு மற்றும் உணவு தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
- விடுதிக்கு தேவைப்படும் நான்கு சக்கர வாகன தேவைகள் சந்திக்கப்படவும், கட்டுமானப்பணிகளுக்கான தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.
- அறிவிக்கப்படாத இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபியுங்கள்.

### தனிப்பட்ட ஜெபக்குறிப்புகள்

- குடும்ப தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.
- எனது முழு குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.
- எனது சுகம் மற்றும் பாதுகாப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.
- எனது குடும்பம் சோர்ந்து போகாமல் உற்சாகமாக பணி செய்ய ஜெபித்துக் கொள்ளுங்கள்.
- ஊழியத்தில் சந்திக்கும் சவால்களை தேவ பெலத்தோடு மேற்கொள்ள ஜெபித்துக் கொள்ளுங்கள்.
- ஆவிக்குரிய வாழ்வில் ஒவ்வொரு நாளும் நாங்கள் பெலப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# நீங்களும் இணையலாம்!

**'மிஷன் இந்தியா' தொலைதூர திட்டம் :**

**ஒரு கோடி மக்கள்!**

**ஒரு இலட்சம் கிராமங்கள்!**

**ஓராயிரம் திருச்சபைகள்!**



**ஒரு நூறு மிஷனெரிகள் என தூர தரிசனத்தோடு தேவ பணியை நிறைவேற்றி வருகிறது. நீங்கள் ஏதோ ஒரு விதத்தில் இத்தரிசனத்தை நிறைவேற்ற விரும்பினால் எங்களோடு இணைந்து கொள்ளுங்கள். நாம் ஒன்றிணைந்து தேவ பணியை நிறைவேற்றலாம்.**

**மேலும் தொடர்புக்கு : 9444393227 என்ற எண்ணை தொடர்பு கொள்ளுங்கள்.**

# மிஷன் இந்தியா இயக்கத்தின் வெளியீடுகள்

**வரலாற்றில் வார்லி - ₹125/-**

(சகோ. ஆர்தர் ஜெபராஜ் அவர்களின் வாழ்க்கை வரலாறு)

**சாலொமோனின் சிதறல்கள் - ₹125/-**

(ஞானி சாலொமோனின் அறிவுரைகள்)

**SANDWICH - ₹125/-**

(சாலொமோனின் அறிவுரைகள் - ஆங்கிலத்தில்)

**தென்னகத்தின் பவுல் - ₹500/-**

(சகோ. எமில் ஜெபசிங் அவர்களின் வாழ்க்கை வரலாறு)

**கறைபடா ஆசான் - - ₹125/-**

(சகோ. ஸ்டான்லி பிரின்ஸ் அவர்களின் வாழ்க்கை வரலாறு)

**சுவடுகள் பாகம் 1 - ₹125/-**

(இந்தியாவில் பணி செய்த 16 மிஷனெரிகளின் வரலாறு)

**சுவடுகள் பாகம் 2 - ₹125/-**

(இந்தியாவில் பணி செய்த 15 மிஷனெரிகளின் வரலாறு)

**ஜொலித்த நட்சத்திரங்கள் & HALL OF FAME - ₹150/-**

(பல விளையாட்டு வீரர்களின் அனுபவ சாட்சிகள் - தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்)




மிஷன் இந்தியா இயக்கத்தின் வெளியீடுகளை வாங்கி பயன்பெறுங்கள், தங்கள் பதிப்பிற்கு முந்துங்கள்!

மேலும் விவரங்களுக்கு :
மிஷன் இந்தியா இயக்கம்
எண் :27, ஏஞ்சல் ஹவுஸ்,
இரண்டாவது தளம்,
டெய்லர்ஸ் எஸ்டேட் 2வது தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024
செல் : +91 94443 93227

SEESHAN
HDFC | A/c 50200063676859
IFSC:HDFC0001765
MOGAPPAIR WEST, Chennai

UPI ID: 9994388850@hdfc